**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 81/2023**
**Deposition of witness of Plaintiff – P.W.1 (வைத்தியநாதன்)**
**17.11.2025**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் விளம்புகை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மாவட்ட ஆட்சி தலைவர், வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.
2. எந்த சர்வே எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 45/5D மற்றும் 45/5C21E ஆகிய சொத்துக்கள் ஒரே சேகரமாக உள்ளது, அதற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையிலும் அவ்வாறு சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.
3. சர்வே எண் 45/5D யின் விஸ்தீரணம் 2180 சதுர அடிக்கு 5 செண்ட். அதற்கு நான்கெல்லை இனாம்குளத்தூர் பிரிவு ரோட்டிற்கு மேற்கு, வடிவேல் வீட்டிற்கு கிழக்கு, எனது மற்றொரு இடமான 45/5C21E இடத்திற்கு தெற்கு மற்றும் தென்புற நான்கெல்லை நியாபகத்தில் இல்லை.
4. நான் மேலே சொன்ன இரண்டு சர்வே எண்களிலும் சேர்த்து குடியிருந்து வருகிறேன். சர்வே எண் 45/5C21E இன் விஸ்தீரணம் 3 1/4 செண்ட் ஆகும். அதற்கு நான்கெல்லை வடக்கே வெங்கடாசலம், மேற்கே வடிவேல், கிழக்கில் இனாம்குளத்தூர் பிரிவு சாலை, தென்புறம் 45/5D ஆகும்.
5. தாவா சொத்தில் 1992 இல் எனது தகப்பனார் வீடு கட்டினார். அந்த வீட்டை நான் 2022 ஆம் ஆண்டு புதுப்பித்துள்ளேன். எத்தனை சதுர அடியில் எனது தகப்பனார் வீடு கட்டியிருந்தார் என்றால் 5 3/4 முதல் 6 சதுரத்தில் வீடு கட்டியிருந்தார். நான் தற்போது 20 சதுரத்திற்கு புதுப்பித்துள்ளேன்.
6. எனது தகப்பனார் வீடு கட்டும்போது பஞ்சாயத்தில் முறையாக அனுமதி வாங்கியுள்ளாரா என்றால் வாங்கியுள்ளார், அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.
7. நான் தற்போது பஞ்சாயத்தில் அனுமதி பெற்று தான் புதுப்பித்துள்ளேன். அந்த அனுமதி ஆவணத்தையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை.
8. தாவா சொத்தின் பழைய சர்வே எண் 45/5 என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 1.22.5 ஹெக்டேர் என்றால் சரிதான். அந்த சொத்து சவரிமுத்து என்ற பொன்னுசாமி ஆசாரிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

9. சவரிமுத்து என்ற பொன்னுசாமி ஆசாரி அந்த சொத்துக்களை பல நபர்களுக்கு பகுதி பகுதியாக பிரித்து விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். அவரிடமிருந்துதான் சௌந்தரம்மாள் 1974 ஆம் ஆண்டு கிரையம் வாங்கியுள்ளார். அவர் 6 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார்.

10. சௌந்தரம்மாளிடமிருந்து தான் எனது தகப்பனார் 1975 இல் கிரையம் வாங்கியுள்ளார். அந்த கிரையத்தின் அடிப்படையில் 05.08.2020 ஆம் தேதி எனக்கு எனது தகப்பனார் தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்துள்ளார்.

11. எனது தகப்பனார் 1975 இல் 5 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார். எனக்கும் அதே 5 செண்ட் நிலத்தை தான் தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

12. சௌந்தரம்மாள் கிரையம் வாங்கிய 6 செண்டில் 5 செண்ட் நிலத்தை எனது தகப்பனாருக்கு கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள 1 செண்ட் நிலம் யாரிடம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

13. சர்வே எண் 45/5D க்கு தென்புறம் தான் சிமெண்ட் ரோடு உள்ளது என்றால் சர்வே எண் 45/5D ன் நடுவில் சிமெண்ட் ரோடு உள்ளது. சிமெண்ட் ரோடு அமைப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே அது மண்ரோடாக இருந்தது என்றால் இல்லை.

14. அந்த சிமெண்ட் ரோட்டிற்கு தென்புறத்திலும், வடபுறத்திலும் கிழமேலாக சாக்கடை உள்ளது என்றால் 2017 இல் அமைத்துள்ளனர். அந்த சிமெண்ட் ரோட்டை பயன்படுத்தி தான் கீழ்புறம் உள்ள இனாம்குளத்தூர் சாலையை அடைய முடியும் என்றால் சரிதான்.

15. அங்குள்ள மக்கள் மேற்படி பாதையை பயன்படுத்தி தான் இனாம்குளத்தூர் சாலையை அடைந்து வருகிறார்கள் என்றால் மற்ற நபர்களுக்கு வேறு சாலை உள்ளது. மேல்புறம் உள்ள 10,15 வீட்டில் உள்ள நபர்கள் மட்டும் மேற்படி சிமெண்ட் சாலையை பயன்படுத்தி வருகிறார்கள்.

16. சிமெண்ட் சாலை மற்றும் சாக்கடையை அப்புறப்படுத்த வேண்டும் என்று சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது சொத்தின் நடுவில் சிமெண்ட் சாலை செல்வதாக சொல்லியுள்ள நிலையில் அதை பொறுத்து அளவை செய்வதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனத்திற்கு மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

17. வா.சா.ஆ.6 புலப்பட நகல் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் புலப்பட நகல் தாக்கல் செய்யாமல் உத்தேச வரைபடம் தாக்கல் செய்துள்ளேன்.

18. சர்வே எண் 45/5D க்கு தென்புறம் தான் கிழமேல் சாலை உள்ளது என தெரிந்துவிடும் என்பதால் தான் நீதிமன்ற ஆணையர் நியமனத்திற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

19. சர்வே எண் 45/5D க்கு தென்புறம் உள்ள கிழமேல் பாதை சுமார் 50 வருடங்களுக்கு மேலாக பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள பாதை என்றும், அந்த பாதையில் சாக்கடை அமைக்கும்போது பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

20. சவரிமுத்து என்ற பொன்னுசாமி ஆசாரி கிரையம் கொடுக்கும் சமயத்திலேயே அனைத்து நபர்களுக்கும் பாதை அமைத்து கொடுத்து தான் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவரிடம் கிரையம் வாங்கிய நபர்களின் கிரைய பத்திரத்தில் கிழமேல் பாதை குறிப்பிட்டு தான் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

21. நானும், எனது தகப்பனாரும் சேர்ந்து மேற்படி பாதையை மறைத்து பத்திரம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி பாதை நாளது வரை சர்வே எண் 45/5Dக்கு தென்புறம் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்றும், வருவாய் துறை புலப்பட நகலில் நாளதுவரை அது பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனால் தான் புலப்பட நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

22. அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தில் தான் சிமெண்ட் பாதை மற்றும் சாக்கடை அமைக்கப்பட்டுள்ளது என்றும், அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் சிமெண்ட் பாதை மற்றும் சாக்கடை அமைக்கும்போது மூன்றாம் நபருக்கு அறிவிப்பு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

23. தாவா சொத்தின் வழியாக பாதை உள்ளது என்று சொல்லி எனது தகப்பனார் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் கிரையதாரர் சௌந்தரம்பாள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

24. சிமெண்ட் சாலை முதலில் 2017 ஆம் ஆண்டும், அதன் பிறகு 2023 ஆம் ஆண்டும் அமைக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டு சிமெண்ட் சாலை அமைக்கப்பட்ட போது வருவாய்துறையில் ஆட்சேபணை செய்து மனு கொடுத்தேனா என்றால் ஆட்சேபணை செய்தேன், மனு கொடுக்கவில்லை.

25. 2017 ஆம் ஆண்டு சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ள நிலையில் 2023 இல் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2020 இல் தான் எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்தார், அதனால் அதன்பிறகு வழக்கு தாக்கல் செய்தேன்.

26. நானும், எனது தகப்பனாரும் தற்போது ஒன்றாக வசித்து வருகிறோம் என்றால் இல்லை, எனக்கு எழுதிக்கொடுத்த பிறகு அவர் வேறு இடத்தில் வசித்து வருகிறார்.

27. 2017 ஆம் ஆண்டு சிமெண்ட் சாலை மற்றும் சாக்கடை அமைக்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் காலம் கடந்து 2023 இல் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 28.03.2023 ஆம் தேதி பிரதிவாதிகள் தொந்தரவு செய்து வழக்குமூலம் ஏற்பட்டுள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

28. தவறான சொத்து விவரத்தின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள எனது தான செட்டில்மென்ட் மற்றும் எனது தகப்பனாரின் கிரைய பத்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் நான் எவ்வித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல.

எனது வழக்குரையில் சொல்லியுள்ள சொத்து விவரம் மற்றும் நான்கெல்லை தவறானது என்றால் சரியல்ல.
29. அரசாங்கத்திற்கு சொந்தமான இடத்தில் சிமெண்ட் சாலை மற்றும் சாக்கடை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வரும் நிலையில் அதை அப்புறப்படுத்த கோருவதற்கு எனக்கு உரிமை இல்லை என்றும், வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

S/d – C. Rajesh, B.A.B.L.,
சார்பு நீதிபதி,
கீரனூர்.